வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.11.2024 சனிக்கிழமை இதழ் : 313 பக்கங்கள் : 12

# எதிர்ப்பு அரசியலில் இனி ஈடுபடமாட்டோம்!

## தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 09

"இதுவரை காலமும் எதிர்ப்பு அரசியல் செய்ததால் எமது மக்கள் சந்தித்த வலிகள் - வடுக்கள் நிறையவே உள்ளன. ஆகவே, வலிகள் - வடுக்களை குறைக்கவேண்டுமானால் சமரச அரசியலிலேயே ஈடுபடவேண்டும்" - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளர் ந. ரவீந்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

11

## தேர்தல் முறைப்பாடுகள் 2ஆயிரத்தை கடந்தன!

கொழும்பு, நவ. 09

பொதுத் தேர்தல் தொடர்பாக 2 ஆயிரத்து 88 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்படி, நேற்று முன்தினம் மாலை வரை, தேர்தல் சட்டங்களை மீறியமை

11

## சமூக தொடர்பாடல் கருவிகளை கற்றலுக்கு பயன்படுத்தத் தடை!

கொழும்பு, நவ. 09

பாடசாலை கல்வி மற்றும் கற்றல் தொடர்பான தொடர்பாடல்களுக்கு சமூக தொடர்பாடல் (வட்ஸ் அப், மெசெஞ்சர், வைபர்) சாதனங்களைப் பயன்படுத்த கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

சமூக தொடர்பாடல் கருவிகளை மாணவர்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்தும் அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர வெளியிட்டுள்ளார்.

இதன்படி, பாடத் திட்டத்தை உள்ளடக்கிய தகவல் தொடர்பு குழுக்களை

11

## சகல பாடசாலைகளுக்கும் 13, 14ஆம் திகதி விடுமுறை!

கொழும்பு, நவ. 09

நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 13, 14ஆம் திகதிகள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி - வியாழக்கிழமை நடைபெறுகிறது. இதனால், அன்றைய தினமும், தேர்தலுக்கான

11

## ரூ. 1,000 கோடி மோசடி; தம்பதியர் கைதாகினர்

கொழும்பு, நவ. 09

பிரமிட் நிதி நிறுவனம் மூலம் ஆயிரம் கோடி ரூபாயை மோசடி செய்த நபரும் அவரின் மனைவியும் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இருவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

குருநாகல் பிரதேசத்தில் பிரமிட் நிதி நிறுவனத்தை நடத்தி வந்த 52 வயதான தம்மிக்க குமார

11

மதுபானசாலை விவகாரம்:

## அரசியலிலிருந்து விலக நான் தயார்!

### சிறீதரன் அறிவிப்பு

கிளிநொச்சி, நவ. 09

"மதுபானசாலைக்கு நான் அனுமதி பெற்றுக் கொடுத்தமையை உறுதிப்படுத்தினால், நான் பாராளுமன்றத்துக்கு தெரிவான பின்னரும் அரசியலிலிருந்து விலகுவேன். போலிப் பிரசாரத்துக்கு எதிராக மக்கள் விழிப்படையவேண்டும்", என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

11




## பிரசார நடவடிக்கை திங்களுடன் நிறைவு

கொழும்பு, நவ. 09

எதிர்வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய பிரசார நடவடிக்கைகள் திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளன.

இதன்படி, எதிர்வரும் 12ஆம் திகதி பாராளுமன்ற தேர்தலுக்கான அமைதிக் காலம்

11







## ஜனாதிபதி, பிரதமர் யாழ். வருகின்றனர்!

யாழ்ப்பாணம், நவ. 09

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக பரப்புரை

11




## அரசாங்கத்துக்கான சர்வதேச ஆதரவு உயர்வு

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

எங்களின் அரசாங்கத்துக்கு சர்வதேசத்தின் ஆதரவு வலுப்பெற்றுள்ளது - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு - அத்துருகிரியவில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பிலேயே

11

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வாஹிமானி தேசிய விருது விழா; 3 விருதுகளை வென்றது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், நவ. 09

ஸ்வாஹிமானி தேசிய விருதுகள் விழாவில் யாழ்ப்பாணம் மாவட்டம் மூன்று விருதுகளை வென்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட "ஸ்வாஹிமானி" 2024 தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வு கொழும்பு - சுகுறுபாயவிலுள்ள 19ஆவது மாடியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தசாசனம் சமயம், கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன கலந்துகொண்டார்.



இதில், யாழ்ப்பாணம் மாவட்டம் மூன்று விருதுகளை பெற்று தமிழ் மாவட்டங்களில் அதிக விருதுகளை பெற்ற மாவட்டம் என்ற பெருமையை பெற்றது.


நல்லூர் பிரதேச வழிகாட்டல் குழு முதலாம் இடத்தையும் 50இற்கும் குறைவான மாற்றுத்திறனாளிகளை தொழிலில் ஈடுபடுத்திய நிறுவனமாக மாற்றுவலுவுடையோர் புனர்வாழ்வு நிறுவனம் (AROD) இரண்டாம் இடத்தையும் சிறந்த காட்சிப்படுத்தும் மட்டத்திலான படைப்பாளியாக கோப்பாய் பிரதேசத்தை சேர்ந்த த.சுரேஸ்குமார் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

இந்த நிகழ்வில் அழைப்பாளராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து கொண்டார். (ஐ-05)

# பக்தி இசைப் பாடகர் விஜயரத்தினம் மறைவு

வடமராட்சி, நவ. 09

பிரபல பக்தி இசை பாடகரும் ஈழத்து சௌந்தரராஜன் என அழைக்கப்பட்டவருமான வைரவப்பிள்ளை விஜயரத்தினம் தனது 82ஆவது வயதில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.



வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலை சேர்ந்த இவர் தமிழக திரை இசைப்பாடகர் ரி. எம். சௌந்தரராஜனின் குரல் வளத்தை கொண்டவர். 15ஆவது வயதில் மேடைகளில் பாடத் தொடங்கினார்.

1965ஆம் ஆண்டு தமிழகப் பாடகர் சௌந்தராஜன் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கு வருகை தந்தபோது, அவரின் முன்பாக சில பக்திப் பாடல்களை பாடினார். இவரின் பாடலை கேட்ட ரி. எம். எஸ். அவர் பாடிய மேடையிலேயே இவரையும் பாட வைத்தார். இதைத் தொடர்ந்து விஜயரத்தினத்தை ஈழத்து சௌந்தரராஜன் என்று அழைத்து வந்தனர்.

விஜயரத்தினம் ஈழத்தின் பல ஆலயங்களால் வெளியிடப்பட்ட இசைப் பேழைகளில் பாடல்களை பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# கடும் மழையால் யாழில் இரு குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 09

கடும் மழையால் யாழ்ப்பாணத்தில் இரண்டு குடும்பங்களை சேர்ந்த 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/401 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த நால்வரும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/356 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வீட்டின் மீது மரம் முறிந்து விழுந்ததில் வீடு பகுதியளவில் சேதமடைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ- 05)

# ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 09

சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலையில் புதிய திறன் வகுப்பறை திறப்பும் மாணவர்களின் கண்காட்சியும் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் சிவசுப்பிரமணியம் நேதாஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திறன் வகுப்பறையை ஸ்கந்தவரோதய நிதியத்தின் உப பொருளாளரான சுலோசனா தாமோதரம்பிள்ளை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதய நிதிய தலைவர் மருத்துவர் கனகரட்ணம் சிவகுமார், ஸ்கந்தவரோதய நிதிய இணை நிறுவனர் கந்தையா மகேந்திரலிங்கம் உட்பட ஸ்கந்தவரோதய நிதிய உறுப்பினர்களும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



புதிதாக அமையப்பெற்ற கட்டடத்தில் ஒரு வகுப்பறை திறன் வகுப்பறையாக மாற்றப்பட்டது. திறன் பலகைக்கான நிதியை ஸ்கந்தவரோதய நிதியம் வழங்கியிருந்தது. (ஐ)

# வீதியில் மரம் விழுந்ததால் போக்குவரத்து பாதிப்பு



கிளிநொச்சி, நவ. 09

கிளிநொச்சி ஏ -35 பிரதான வீதியின் தருமபுரம் வைத்தியசாலைக்கு அருகில் வீதியோரமாக நின்ற மரம் கடும் மழையால் வீதியில் குறுக்கே விழுந்ததில் சில மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் வீதியின் குறுக்கே விழுந்த மரத்தை உடனடியாக வெட்டி அகற்றினர். இதனால், போக்குவரத்து மீண்டும் வழமைக்கு திரும்பியது.

மரம் விழுந்ததால் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டதுடன், மின் கம்பமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பரந்தன் ஏ-35 வீதியில் விபத்து; 3 பேர் வைத்தியசாலையில்!

முல்லைத்தீவு, நவ. 09

கிளிநொச்சி பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பரந்தன் பகுதியில் நேற்று காலை டிப்பர் மற்றும் முச்சக்கரவண்டி மோதி விபத்து இடம்பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியை டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட நிலையில் விபத்து சம்பவித்துள்ளது. சம்பவத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் மற்றும் முச்சக்கரவண்டியின் சாரதி ஆகியோர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கசிப்பு விற்ற பெண் கைது!

யாழ்ப்பாணம், நவ. 09

ஊரெழு மேற்கில் நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் 5 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூட்சன் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்து இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பெண், பைகளில் கசிப்பை சூட்சுமமாக பொதி செய்து விற்பனை செய்து வந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-5)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பாடசாலை அதிபர் கைதானார்!

கொழும்பு, நவ. 09

ராகம பகுதியில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றின் பெண் அதிபரொருவர் 150,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார்.

ராகம, மட்டுமாகல பகுதியில் பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து, இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

முறைப்பாட்டாளரின் பிள்ளையை 2025 ஆம் கல்வி யாண்டுக்காக தரம் 01 இல் சேர்ப்பதற்கு குறித்த பெண் அதிபர் இலஞ்சம் கோரியுள்ளார்.

இந்த நிலையில், பாடசாலை வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 04.00 மணியளவில் இலஞ்சம் பெற்ற வேளை அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# முல்லைத்தீவு ஆசிரியர் சடலமாக மீட்கப்பட்டார்

திருகோணமலை, நவ. 09

முல்லைத்தீவை சேர்ந்த ஆசிரியர் ஒருவர் திருகோணமலை புல்மோட்டையில் பாடசாலையில் அவர் தங்கியிருந்த அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நூஹூ லெப்பை மொகமட் முபீஸ் (வயது 28) என்பவரே நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் மனைவி கணவருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்துள்ளார். அந்த அழைப்புக்கு அவர் பதிலளிக்காததால் அச்சமடைந்த மனைவி பாடசாலையின் ஆசிரியர் ஒருவரை தொடர்பு கொண்டு அவரின் அறைக்கு சென்று பார்வையிடுமாறு கேட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் அவரின் அறைக்கு சென்றபோது இரத்த காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் புல்மோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீதிவானின் உத்தரவுக்கு அமைய பிரேத பரிசோதனைக்காக அவரின் சடலம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.11.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீண்டும் வெள்ளை மாளிகைக்கு டொனால்ட் ட்ரம்ப்

நான்கு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை தோற்கடித்து பெருவெற்றி பெற்றிருக்கிறார். அடுத்த வருடம் ஜனவரி 20ஆம் திகதி அவர் தனது 78ஆவது வயதில் அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக பதவியேற்று மீண்டும் வெள்ளை மாளிகைவாசியாகப் போகிறார்.

மிகவும் முதிர்ந்த வயதில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது ஆளாக விளங்கும் ட்ரம்ப் 20 வருடங்களுக்கு பிறகு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரை விடவும் கூடுதலான மக்கள் வாக்குகளை பெற்ற குடியரசுக் கட்சியின் வேட்பாளர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

முதல் பதவிக் காலத்துக்கு பிறகு தொடர்ச்சியாக அடுத்த பதவிக் காலத்துக்கு ஜனாதிபதியாக இல்லாமல் நான்கு வருட இடைவெளிக்கு பிறகு ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கிறார். அமெரிக்க அரசியல் வரலாற்றில் 132 வருடங்களுக்கு பிறகு இவ்வாறு நடைபெற்றிருக்கிறது.

அமெரிக்க காங்கிரஸால் இரு தடவைகள் அரசியல் குற்றச்சாட்டுக்கு (Impeachment ) உள்ளாக்கப்பட்ட பிறகு இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் முதல் நபரும் ட்ரம்ப்தான்.

தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரரை தனிப்பட்ட முறையில் ட்ரம்ப் படுமோசமாக அவதூறு செய்தார். பெண்கள் மீதான வெறுப்பை தூண்டிவிடும் பிரசாரங்களை அவர் மேற்கொண்டார். அமெரிக்காவில் வாழும் சிறுபானமை சமூகங்களுக்கும் குடியேற்றவாசிகள் சமூகங்களுக்கும் எதிராக இன, நிறவெறிப் பிரசாரங்களை தீவிரமாக மேற்கொண்டார்.

கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுத்த அவர், தன்னை தோற்கடித்த ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி பதவியேற்பதற்கு முன்னதாக வாஷிங்டனில் அமெரிக்க காங்கிரஸ் கட்டடத் தொகுதிக்குள் தனது ஆதரவாளர்களை ஏவிவிட்டு கலகம் விளைவித்தவர் என்ற அவப்பெயரும் ட்ரம்புக்கு உண்டு. படுமோசமான குற்றச்செயல்கள் தொடர்பில் அவருக்கு எதிராக பல்வேறு வழக்குகள் விசாரணையில் இருந்த நிலையிலேயே அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார்.

ட்ரம்பிடம் காணப்படும்  இவ்வளவு எதிர்மறையான குணாதிசயங்களில் - நடத்தைகளில் எந்த ஒன்றுமே அவரை மீண்டும் தங்களின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யக்கூடாது என்று பெரும்பான்மையான அமெரிக்கர்களை தடுக்கவில்லை என்பதே முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றிருந்தால் அமெரிக்க ஜனாதிபதியாகும் முதல் பெண் என்ற பெருமையை மாத்திரமல்ல முதலாவது இந்திய - அமெரிக்க கறுப்பின பெண்மணியாகவும் வரலாற்றில் இடம்பெற்றிருப்பார். அதற்கான வாய்ப்பு அவரிடம் இருந்து நழுவிவிட்டது. பைடன் போட்டியில் இருந்து இடைநடுவில் விலகி கமலாவை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக்கியமை நிறவெறியை வெள்ளையர்கள் மத்தியில்  உச்சபட்சத்துக்கு தூண்டிவிடுவதற்கு வாய்ப்பாகப் போய்விட்டது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."
- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)



## சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய 2 மன்னார் வெதுப்பகங்களுக்கு சீல்!

*மன்னார், நவ. 09*

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரு வெதுப்பகங்கள் அடையாளம் காணப்பட்டு நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து சீல் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல மாதங்களாக மன்னார் பொது சுகாதார பரிசோதகர்கள் குறித்த வெதுப் பகங்கள் தொடர்பில் பரிசோதிக்கப்பட்டு 12 குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என கடிதம் மூலம் அறி விக்கப்பட்ட போது குறித்த வெதுப்பகங்கள் அறிவிப்புக்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள் ளாத நிலையில் நேற்று முன்தினம் குறித்த வெதுப்பகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு வெதுப் பகங்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை மூடுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுட்டிக்காட்டிய 12 சுகாதார பிரச்னைகளையும் நிவர்த்தி செய்யும் வரை குறித்த வெதுப்பகங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

## தூர பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகளுக்கு தெளிவூட்டல்

*யாழ்ப்பாணம், நவ. 09*

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்து சாரதிகளுக்கு யாழ். பொலிஸார் சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பில் நேற்று முன்தினம் தெளிவூட்டல்களை வழங்கினர்.

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் விபத்துக்களை தடுப்பது தொடர்பில் நேற்று தெளிவூட்டப்பட்டது. வாகனங்களைச் செலுத்தும் பொழுது அதிக வேகத்துடன் செல்வது தொடர்பில் பொதுமக்களினால் யாழ்ப்பாணம் பொலிஸ் பொறுப்பு அதிகாரிக்கு பல்வேறு முறைப்பாடுகள் அதிகளவில் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் இதன்போது தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அதிக சத்தமாக பாடல்கள் ஒலிபரப்படுவது தொடர்பில் இதன் போது சாரதிகளுக்கு, பொறுப்பதிகாரியினால் தெளிவூட்டல் வழங்கப்பட்டது. (அ)

## கிளிநொச்சி நீதிமன்ற வளாகம் துப்புரவு

*கிளிநொச்சி, நவ. 09*

மழையுடனான கால நிலையை முன்னிட்டு, கிளிநொச்சி நீதிமன்ற வளாகத்தில் நேற்று துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ் ராஜா, நீதிமன்றப் பணியாளர்கள், கிளிநொச்சி மற்றும் தர்மபுரம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் நீதிமன்ற வளாகத்தில் நிழல்தரு மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. (அ)

## அரசியலில் பெண்களின் பங்களிப்பு விழிப்புணர்வு நாடகம் வவுனியாவில்

*வவுனியா, நவ. 09*

வவுனியாவில் விழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.


"அரசியலில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவோம்" என்ற தொனிப் பொருளில் இந்த விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று நடைபெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் இந்த வீதி நாடகத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் நிகழ்வு இடம்பெற்றது.

அரசியலில் பெண்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் முகமாக குறித்த விழிப்புணர்வு நாடகம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

நவம்பர் - 09 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 23
நல்ல நேரம் : 7.31 -9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள்,செயல்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வீர்கள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறிக்கொண்டிருக்க வேண்டாம். வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும்.

**கடகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

**சிம்மம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடிவந்து பேசுவார்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். ஆலோசனை ஏற்கப்படும்.

**தனுசு**
குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும். குதூகலமான சூழ்நிலை உருவாகும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. குடும்பத்தில் சண்டை சச்சரவு நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**கும்பம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் தொந்தரவு தரும். உடல் அசதி சோர்வு வந்து விலகும்.

**மீனம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் தொந்தரவு தரும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். ஆதாயம் தரும் நாள்.

# தேர்தல் விதிமீறல் குற்றச்சாட்டு பார்த்திபனுக்கு அழைப்பாணை

வடமராட்சி, நவ. 09

தேர்தல் நடத்தை விதிமீறல் குற்றச்சாட்டு தொடர்பில், பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் வேட்பாளராக போட்டியிடும் வ. பார்த்திபனுக்கு அழைப்பாணை அனுப்புமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரப் பகுதியில் கடந்த ஒக்ரோபர் 24 ஆம் திகதி தேர்தல் பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்ட போது விதிமீறலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வ. பார்த்திபன் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டதன் பின்னர் பொலிஸ் பிணையில் அன்றைய தினம் இரவே விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் வழக்குப் பதிவு செய்து பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குப் பத்திரம் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொ. கிருஷாந்தன், 2025 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி வ. பார்த்திபனை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்து கட்டளை பிறப்பித்தார். (எ-02)

# நானாட்டான் மேய்ச்சல் தரை குறித்து இன்று இரு தரப்பு கலந்துரையாடல்!

## மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை

மன்னார், நவ. 09

மன்னார், நானாட்டான் மேய்ச்சல் தரை தொடர்பில் எழுந்துள்ள பிரச்னை தொடர்பில் இரு தரப்பினரையும் இன்று சனிக்கிழமை அழைத்து கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தருவதாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்குச் சென்று புதன்கிழமை கலந்துரையாடலில் ஈடுபட்டனர். நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கு மேய்ச்சல் தரவைக்கு என ஒதுக்கப்பட்ட கட்டுக்கரை குளம், புல்லறுத்தான் கண்டல் பகுதியில் சிலர் அடாத்தாக விவசாய செய்கையில் ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் இதன்போது மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்தே இரு தரப்பு கலந்துரையாடலுக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ)

# ஹெரோயினுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 09

யாழ்ப்பாணம் - கொட்டடி பகுதியில் ஹெரோயினுடன் 22 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இளைஞரிடம் இருந்து 120 மில்லிகிராம் ஹெரோயினை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூட்சன் சூரிய பண்டார அவர்களுக்கு கீழ இறங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-05)

## கசிப்புடன் கைதான சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், நவ. 09

சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் 12 போத்தல் கசிப்புடன் கைதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கடந்த புதன கிழமை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்த நிலையில் விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத் தினர்.

இதன்போது, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (ஐ- 05)

# புங்குடுதீவு கூட்டுறவு சங்கத்தில் 53 இலட்சம் ரூபாய் நிதி மோசடி

யாழ்ப்பாணம், நவ. 09

புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் 53 இலட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கீழ் 6 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அந்த சங்கத்தின் கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 13 மாதங்களில் 53 இலட்சம் ரூபாய் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சங்கத்தால் ஆவணங்கள் சரியான முறையில் பேணப்படாத நிலையில் இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# வட்டுக்கோட்டையில் திருட்டு சந்தேகநபருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், நவ. 09

வட்டுக்கோட்டையில் வீடு ஒன்றில் பணம், கைபேசி திருடிய சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் செம்பாட்டம் தோட்டம் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து ஒரு தொகை பணம் மற்றும் கைபேசி என்பன களவாடப்பட்டன.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் அதே பகுதியை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் இருந்து பணம் மற்றும் கைபேசியையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட் டார். நீதிவான் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுகத்துக்கு விஜித ஹேரத் திடீர் விஜயம்!

## நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்



கொழும்பு, நவ. 09

**கொள்கலன் அனுமதியில் ஏற்பட்டுள்ள தாமதம் உள்ளிட்ட துறைமுகத்தில் நிலவும் பிரச்னைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் விஜித ஹேரத் நேற்று முன் தினம் கொழும்பு, துறைமுகத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.**

அங்கு சுமார் 2 வருடங்களாக கொள்கலன் அனுமதியில் இழுபறி நிலவி வருவதால் தாங்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக துறைமுக அதிகாரிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

துறைமுகத்தில் இருந்து கொள்கலன்கள் வெளியேறுவதில் பல குளறுபடிகள் நடப்பதாகவும், ரோக்கன் எண் கொடுத்தாலும் அந்த வரிசையில் கொள்கலன்கள் துறைமுகத்தை விட்டு வெளியேறுவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், சில சேவையாளர்கள் மது அருந்திக்கொண்டே கடமைகளைச் செய்வதாகவும், சிலர் தங்கள் கடமைகளைப் புறக்கணித்து செயற்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே, கொள்கலன் அகற்றும் செயற்பாடுகளை மோசடி, ஊழல் இன்றி சுதந்திரமாக மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். (அ)

# கொழும்பு நோக்கி சென்ற பஸ் விபத்து



கொழும்பு, நவ. 09

கொன்வெவயில் இருந்து மடகல்ல சென்று தலதாகம ஊடாக கொழும்பு நோக்கி பயணித்த மஹவ டிப்போவுக்கு சொந்தமான பஸ் ஒன்று நேற்றுக் காலை கொன்வெவ பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

பஸ் கவிழும்போது அதில் 15 பயணிகள் இருந்தனர் என கூறப்படுகிறது.

காயமடைந்த பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# இவ்வருடம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் இரத்து!

கொழும்பு, நவ. 09

இந்த வருடத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனச் சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள் நீதிமன்றங்களால் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2024 ஜனவரி மாதம் முதல் 3,249 சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

சாரதிகள் செய்த பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன்றங்களால் நடத்தப்பட்ட வழக்கு விசாரணைகளின்போது உரிய சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுவதற்கு கவனக்குறைவாக வாகனங்களை செலுத்துவதும், வாகனங்கள் சரியான தரத்தில் இல்லாததுமே பிரதான காரணம் என கொழும்பு பல்கலைக்கழ கத்தின் சமூகவியல்துறை பேராசிரியர் மொஹமட் மஹிஷ் தெரிவித்தார்.

எனவே, வாகனத்தை ஓட்டுவதற்கு முன்னர் அதன் தரத்தை பரிசோதிப்பது அவசியமானது. நாட்டின் வீதி அமைப்பில் காணப்படும் குறைபாடுகளும் வீதி விபத்துக்கள் அதிகரிப் பதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# நிதி மோசடிக் குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த நபர் கைது!

கொழும்பு, நவ. 09

நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த இலங்கையர் ஒருவர் மலேசியாவில் இருந்து வருகை தந்தபோது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

பிரமிட் மோசடி மூலம் பல நபர்களிடமிருந்து 1,800 மில்லியன் ரூபாயை குறித்த நபர் மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு முன்பு நாட்டை விட்டு தப்பிச் சென்ற குறித்த நபரை வரவேற்க விமான நிலையத்திற்குச் சென்ற அவரது மனைவியும் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

# அநுரகுமாரவினால் ட்ரம்புடன் இலகுவாக பணியாற்றமுடியும்

## கூறுகின்றார் சரத் அமுனுகம

கொழும்பு, நவ. 09

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்கவுக்கு இலகுவாக பணியாற்ற முடியும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியாக தெரிவானதன் மூலம் ரஷ்யா - உக்ரைன் மற்றும் இஸ்ரேல் - ஈரான், பலஸ்தீன, லெபனான் யுத்தங்களுக்கு ஒரு முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவின் நிதி வீண் விரயமாவதால் இந்த யுத்தங்களுக்கு செல்லும் அமெரிக்க நிதியை டிரம்ப் நிறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.


அமெரிக்காவை மீண்டும் உலகின் பலமான நாடாக மாற்றுவதற்கு இவ்வாறு வீண் விரயமாகும் நிதிகள் நிறுத்தப்படும் என டொனல்ட் டிரம்ப் கூறியுள்ளார். அதேவேளை, சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் வானகங்களின் விலைகள் 600 மடங்குவரை உயரும் என எதிர்பார்க்கப்படுவதுடன், பொருட்களுக்கான வரி விதிப்புகளும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக ஜனநாயக கட்சியின் ஆட்சியில் அமெரிக்காவில் சீன முதலீடுகள் அதிகரித்திருந்தன. இவை அமெரிக்காவின் பொருளாதாரத்துக்கு கடும் பாதிப்பாக அமைந்துள்ளதாக டிரம்ப் கூறியிருந்தார். சீனா முதலீடுகள் நிறுத்தப்பட்டு சீன பொருட்களுக்கு வரிகள் அதிகரிப்பட்டால் அந்த பயன்களை இலங்கையை போன்ற நாடுகளால் அடைய முடியும். சீனாவின் முதலீடுகள் இலங்கை போன்ற நாடுகளை நோக்கி நகரும்போது அதனை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

ட்ரம்புடன் அநுரகுமார திஸாநாயக்கவால் இலகுவாக பணியாற்ற முடியும். காரணம் புடின், கிம் ஜான் உன் உடன் பணியாற்ற முடியும் என டிரம்ப் கூறியுள்ளார். புடின் எனது நண்பர் எனக் கூறியுள்ளார். அதனால் அநுரவுடன் பணியாற்றுவது கடினமாக இருக்காது.

ஒபாமா மற்றும் பைடனின் ஆட்சியில் ஐ.நாவில் மனித உரிமைகள் தொடர்பில் பல அழுத்தங்கள் இருந்தன. குறிப்பாக அமெரிக்காதான் உலக மனித உரிமைகளை பாதுகாப்பதாக கூறினர். டிரம்ப் இந்த விடயத்தை கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டார் என்றார். (அ)

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தேசியம் - சூழலியம் - சுயநிர்ணயம்
அரசியலில் தமிழ்த் தேசியச் செழுமை!
அபிவிருத்தியில் நிலைபேறான முழுமை!
சுற்றுச்சூழலில் காணுமிடமெல்லாம் பசுமை!
01


நா.பார்த்தீபன்
கூட்டுறவாளர்
06
தமிழ்த் தேசிய அரசியலில் ஒலிக்கும்
ஒரேயொரு பசுமைக்குரல்
பொ.ஐங்கரநேசன் M.Sc, PGDJMC
சுயேச்சைக் குழு - 14
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாக்குகளை சிதறடிக்க வேண்டாம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் துசானந்தன் கோரிக்கை

அம்பாறை, நவ. 09

**ஒரு நாடு இரு தேசங்கள் இலக்கினை அடைய அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் ஒருமித்து வாக்களிக்காவிட்டால் அரசியல் அநாதைகளாக்கப்படுவர் என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி இளைஞர் தலைவரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முதன்மை வேட்பாளருமான புஷ்பராஜ் துசானந்தன், வாக்குகளை சிதறடிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.**

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு காளி கோவில் வீதியில் தேர்தல் அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தேர்தலில் எமது கட்சிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு நிச்சயமாக இருக்கின்றது. எமது கட்சி வடக்கு, கிழக்கு உரிமைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றது. எமது தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் தமிழ் தேசிய இருப்புக்கு நேர்மையாக குரல் கொடுத்து வருகின்றார்கள். அவரது கரங்களை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த நாட்டின் புதிய ஜனாதிபதியை எவ்வாறு மக்கள் உருவாக்கினார்களோ அதே போன்று இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் புதிய மாற்றங்களை மக்கள் விரும்பவேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் ஒன்று திரண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியை தமிழர்களின் பெரும்பான்மை சக்தியாக கொண்ட தலைமைத்துவமாக அங்கீகரிக்க ஒரு வாய்ப்பை தருவார்கள் என்று நம்புகின்றேன். அதற்கு எமது அம்பாறை மாவட்ட மக்களும் ஒரு பங்குதாரர்களாக இருப்பார்கள். எங்கள் மாவட்டத்தின் தமிழர்களின் இருப்புகளை தக்க வைக்க வேண்டுமாயின் நிச்சயமாக மக்கள் அனைவரும் ஒரே தரப்புக்கு ஆதரவளிக்கவேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டது. கடந்த காலங்களில் மக்கள் ஒரே தரப்புக்கு மாத்திரம் வாக்களித்து வந்தீர்கள். ஆனால் மக்களின் இருப்பிலோ அல்லது வாழ்க்கையிலே எந்த விதமும் மாற்றமும் நடைபெறவில்லை. குறிப்பாக நமது கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தை அரசியல் மேடைகளுக்காக கடந்த 15 வருடங்களாக பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஒரு கணக்காளரைக்கூட அச்செயலகத்திற்கு நியமிக்க வக்கில்லாத ஒரு தரப்பினராக கடந்த காலத்தில் இருந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் மக்களின் உரிமை சார்ந்த பிரச்னைகளை அவர்கள் அரசியல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான போலி தேசியவாதிகள் எமது உரிமைகளுடன் விளையாடுகின்றவர்கள். இந்த முறை நிராகரித்து ஒரு மாற்றத்தை நிச்சயமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு மக்கள் வழங்கவேண்டும்-என்றார்.

(அ)

# தமிழ்த் தேசிய அரசியலுக்கு சுமந்திரன் பொருத்தமற்றவர்

## மறவன்புலவு சச்சிதானந்தம்

யாழ்ப்பாணம், நவ. 09

சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலுக்கு பொருத்தமானவர் அல்ல அவர் ஒரு மதமாற்றி என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரால் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவு தொடர்பில் சுமந்திரன் மீது பல்வேறு தரப்பினர்களும் குற்றச்சாட்டு முன்வைப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலுக்கு பொருத்தமற்றவர் என நான் ஆறு வருடங்களுக்கு முன்பே கூறியிருக்கிறேன். கட்சிக்கும் அதனை தெரிவித்திருக்கிறேன்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த புத்தர் கூட மத மாற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டது இல்லை. சுமந்திரன் மதமாற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்.

சுமந்திரனின் மனைவிக்கு, இங்கிலாந்தில் இருந்து மதமாற்ற செயற்பாடுகளுக்காக டொலரில் பணம் வழங்கப்படுகிறது.

சாவித்திரி சுமந்திரன் ஒரு கருவி மட்டுமே. சுமந்திரன் தான் மதமாற்ற செயற்பாடுகளை முன் நின்று செயல்படுத்துகிறார்.

4 இலட்சம் சைவ வாக்காளர்கள் உள்ள நிலையில் எமது இனத்தையும் மதத்தையும் காப்பாற்றுவதற்காக ஆமை சின்னத்துக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும்-என்றார். (அ-05)

# பொன்னாலையில் கமலரூபன் பிரசாரம்!

யாழ்ப்பாணம், நவ. 09

பாராளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில், ஊஞ்சல் சின்னத்தில் சுயேச்சை குழு 2 இல் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி ஈ.ஸ்.பி நாகரத்தினம் கமலரூபன், யாழ்ப்பாணத்தில், கல்விளான் மற்றும் பொன்னாலை பகுதியில், பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அங்கு, பெண் தலைமைத்துவ குடும்பத்தினால் செயற்படுத்தப்படும் சுயதொழில் முயற்சியாண்மை தொடர்பில் ஆலோசித்தார்.

பெண் எதிர்நோக்குகின்ற பிரச்னைகள், இடர்பாடுகளை கேட்டறிந்து கொண்ட வேட்பாளர் கமலரூபன், அவற்றுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான வழிவகைகள் குறித்தும் கலந்துரையாடினார். (அ)

# இளைஞர்களுக்கு ஆணை தாருங்கள்!

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்பாளர் செ.மயூரன் கோரிக்கை

வவுனியா, நவ. 09

தமிழ்த் தேசிய பின்னடைவுக்கும் மக்கள் நம்பிக்கை இழந்தமைக்கும் இளைஞர்களை புறந்தள்ளியமையே காரணம் என தெரிவித்துள்ள ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் செ.மயூரன், தமிழ்த் தேசியத்தின் பால் சிதைந்துபோன நம்பிக்கையை இளைஞர்களால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்து அல்லது அந்த பயணத்தில் இருந்து தடம்மாறுவதானது எமது தாயக கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் மறுதலிக்கின்றமைக்கு ஒப்பானதாகும். எனவே தமிழ்தேசியத்தை பாதுகாத்து தமிழர் தாயககோட்பாட்டை நிலைநிறுத்தி அதனை அடுத்த தலைமுறையிடம் கொண்டு செல்வதற்கான பணியினை இளைஞர்களால் மாத்திரமே செய்யமுடியும்-என்றார்.

(அ)

# அமைச்சு பதவிகளை மக்கள் கேட்கவில்லை!

## மிதிலைச்செல்வி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 09

தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கிறார்களே அல்லாமல் அமைச்சுப் பதவிகளை எதிர்பார்க்கவில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவரால் சுமந்திரன் தமிழ் மக்கள் அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கிறார்கள் என தெரிவித்திருந்தமை தொடர்பில் பதில் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் அமைச்சுப் பதவிகளை பெறுமாறு கேட்டதாக நாங்கள் அறியவில்லை. நாங்களும் பல்வேறு இடங்களுக்கு தேர்தல் பரப்புரைகளுக்காக சென்ற நிலையில் மக்கள் தமது அரசியல் தீர்வை பெறுவதற்கு தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்ற கருத்தையே அதிகம் முன்வைக்கிறார்கள்.

சுமந்திரனுக்கு தெற்கு கட்சிகளுடன் இணைந்து அமைச்சுப் பதவியை பெறுவதற்கு விருப்பமாக உள்ள நிலையில் அது தமிழ் மக்களுக்கு விருப்பம் எனக் கூறி மக்களின் தலையில் பாவத்தை போடப் பார்க்கிறார்.

சுமந்திரன் தமிழரசுக் கட்சிக்குள் என்ன செய்தார் என்பது பலருக்கு தெரியும் தானே. முடிவை எடுத்துவிட்டு கட்சியின் மத்திய குழு முடிவு எனப் பலதை தெரிவித்து இருக்கிறார்.

நான் தற்போது மான் சின்னத்தில் தமிழ் மக்கள் கூட்டணியில் பெண் வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் எமது கட்சி மட்டுமே மாற்றத்தை உருவாக்கக்கூடிய வேட்பாளர்களை கொண்டுள்ளது.

மக்கள் மத்தியில் புதியவர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்ற நிலைப்பாடு அநேகமானவர்களிடம் காணப்படும் நிலையில் எமது கட்சி மட்டுமே புதியவர்களை கொண்ட கட்சியாக காணப்படுகிறது-என்றார்.

(அ-05)

# கடந்த காலங்களில் பாராளுமன்றத்துக்கு சென்றோர் மக்களுக்காக செயல்பட்டனரா?

## அங்கஜன் இராமநாதன் கேள்வி



யாழ்ப்பாணம், நவ. 09

அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், எமது பிள்ளைகளுக்கான எதிர்காலத்தை உருவாக்கவும், கடந்த காலங்களில் பாராளுமன்றம் சென்றவர்கள் செயற்பட்டார்களா என சிந்தித்து, மக்கள் இம்முறை வாக்களிக்கவேண்டும் என ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக செயற்படும் நபர் பாராளுமன்றம் செல்ல வேண்டுமா என்பதை, மக்கள் தீர்மானிக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் பிரான்பற்று கிராமத்தில் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டவேளை இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

# பலம்மிக்க ஒரு கட்சியை வெற்றி பெற செய்யுங்கள்

## சித்தார்த்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 09

ஒவ்வொரு கட்சியில் இருந்து ஒவ்வொரு வேட்பாளர்கள் பாராளுமன்றத்திற்கு செல்வது என்பது ஆபத்தானது எனவும் பலமான ஒரு கட்சியை பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் எனவும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்ணியின் வேட்பாளர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் மயிலணிப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த பரப்புரை கூட்டத்தில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் பாலசிங்கம் கஜதீபனும் கருத்து தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சிக்கலிலிருந்து நாடு இன்னும் மீளவேயில்லை!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ. 09

**நாடு இன்னும் பொருளாதார பிரச்னையிலிருந்து மீள வில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

காலியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுர குமார தலைமையில் அரசாங்கம் நடைமுறையில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருப்பதைப் போலவே அவர்கள் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்களிடையே வைராக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிடுகிறார்கள்.

நாட்டில் 70 வருடங்களாக எதுவும் நடைபெறவில்லை என்பது போன்று பேசுகிறார்கள்.

அரச ஊழியர்களுக்கு ஏன் சம்பள அதிகரிப்பை வழங்க முடியவில்லை? ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் இந்த விடயத்தில் ஏன் மௌனமாக இருக்கிறது? அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங்கள் எங்கே?

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான உதய செனவிரத்னவின் அறிக்கையை நடைமுறைப்படுத்து வதற்காகவே எமது உறுப்பினர்களை நாம் பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். பொருளாதாரத்தில் வளர்ச்சி அவசியம், மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இதனை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் செய்ய முடியாது. ஏனெனில் அவர்கள் இந்த சமுதாயத்துக்கு புதியவர்கள்.

ஆதலால்தான் அனுபவம் வாய்ந்தோரை பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்ய வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன்-என்றார். (அ)

# அநுரவின் அரசு மக்கள் விருப்பை பெறவில்லை

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 09

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்திற்கு முதல் மாதத்தில் மக்கள் விருப்பை பெற்றுக்கொள்ள முடியவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதிவியேற்றுள்ளபோதிலும் அவருக்குரிய கடமைகளை பொறுப்பேற்றுள்ளமையை போன்று தெரியவில்லை. புதிதான ஜனாதிபதியொருவர் நியமிக்கப்படும் பட்சத்தில் புதிய மாற்றங்கள் வேலைத்திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்படும் ஆனால் அத்தகைய எவற்றையும் தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சியில் காணமுடியவில்லை.

ஆனால் ஜனாதிபதி அவருடைய கட்சியின் கடமைகளை உரியவாறு முன்னெடுத்து வருகின்றமையை காணமுடிகின்றது. ஜனாதிபதி என்ற வகையில் அவர் எதனையும் செய்ததாக தெரியவில்லை. முதல் மாதத்தில் மக்கள் விருப்பை பெறமுடியாத அரசாங்கத்தினால் எவ்வாறு அடுத்த அடுத்த மாதங்களில் மக்களின் விருப்பை வெல்ல முடியும் என வினவ விரும்புகின்றேன். குறைந்த பட்சம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்தாலும்கூட ஆட்சிக்கு வந்தமுதல் மாதத்தில் அவருடைய அரசாங்கம் மக்கள் விருப்பை பெற்றுக்கொண்டது -என்றார். (அ)

# அடுத்த ஜனாதிபதியை உருவாக்குவதே நோக்கம்!

## சாகர காரியவசம் கோரிக்கை

கொழும்பு, நவ. 09

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை உருவாக்குவதே கட்சியின் பிரதான நோக்கம் என பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே

அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்து சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்து நாட்டில் அபிவிருத்திக்கு வித்திட்ட தலைவரை திருடர்கள் எனக் கூறினர்.இந்த விடயத்தை மக்கள் விடுதலை முன்னணியினரே மேற்கொண்டனர்.

அநாகரிக தர்மபாலவுக்கும் இத்தகைய விடயத்தையே மேற்கொண்டனர் . வாழ் நாள் பூராகவும் அவரை திருடர் என்றனர். அவர்மரணித்தமையை தொடர்ந்து அவருக்கு சிலை அமைத்து தேசிய வீரர் என கூறினர்.

இத்தகைய பின்னணியில் வாழும் வீராகவுள்ளவரின் பெயருக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டாம் என தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். அதேபோன்று அவர் தொடர்பில் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்து நிரூபிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உகண்டாவுக்கு பணம் அனுப்பினார் என்றால் அந்த விடயம் தொடர்பில் விசாரணையை முன்னெடுத்து உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என அரசாங்கத்திடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

அநாகரிக தர்மபாலவிற்கு செய்த விடயத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கும் செய்ய வேண்டாம் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அதேபோன்று எதிர்வரும் 2029 ஆம் ஆண்டில் எமது கட்சியிலிருந்து ஜனாதிபதியை உருவாக்குவதே எம்முடைய பிரதான நோக்கமாகும்-என்றார். (அ)

# மலையக மக்களை அரசியல் அநாதைகளாக்க இடமில்லை

## கூறுகிறார் வடிவேல் சுரேஷ்



கொழும்பு, நவ. 09

“மலையக மக்களை அரசியல் அநாதைகளாக்குவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். நிச்சயம் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்போம்.” - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஐக்கிய ஜனநாயக குரல் கட்சி ஆதரவாளர்களுக்கு கட்சியின் அறிமுகம் மற்றும் கொள்கைகளை அறிமுகப்படுத்தும் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஹற்றனில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க, ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன், ஷான் பிரதீஸ் உட்பட பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத்தேர்தலில் நான் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட திட்டமிட்டிருந்தேன். ஆனால் எமது பதுளை மாவட்ட மக்கள் என்னை விடவில்லை. மக்கள் பிரதிநிதித்துவத்தை காக்க நான் அங்கு போட்டியிடுகின்றேன்.

எனது மகனை நுவரெலியாவுக்கு அனுப்பி வைத்துள்ளேன். அவரையும், இளம் பெண் வேட்பாளர் அனுஷா சந்திரசேகரனையும் நிச்சயம் பாராளுமன்றம் அனுப்பு வையுங்கள். மற்றுமொரு தொப்புள் கொடி உறவையும் அனுப்புங்கள். நுவரெலியா மாவட்டத்தில் இருந்து மொத்தம் மூவரை அனுப்பி வையுங்கள்.

அதுமட்டுமல்ல பதுளை மாவட்டத்தில் இருந்து ஒலிவாங்கி சின்னத்தில் மூன்று தமிழர்கள் பாராளுமன்றம் செல்வதைத் தடுக்க முடியாது. இங்குள்ள அனைவரும் எனது உறவுகள்தான். மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு சதி நடக்கின்றது. இதனை என் உடன் பிறப்புகள் முறியடிக்க வேண்டும்-என்றார்.

# 2025ஆம் ஆண்டு நாட்டில் பாரிய குழப்பம் ஏற்படும்

## வஜிர அபேவர்தன எச்சரிக்கை

கொழும்பு, நவ. 09

2025ஆம் ஆண்டு நாட்டில் பாரிய குழப்பமொன்றை எதிர்பார்க்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் காலி மாவட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்றுக்கு புதிதாக தெரிவு செய்யப்படவுள்ள திசைக்காட்டி குழு, நாட்டில் இடதுசாரி இயக்கத்தை நிரந்தரமாக அழித்தொழிக்கும் என வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீங்கள் பொருளாதாரத்தில் சிக்கித் தவித்தபோது உங்களை விடுவித்தவர் ரணில் விக்கிரமசிங்க.

எமது அரசாங்கம் உருவாக்கிய பாதையில் இருந்து இவர்கள் வெளியேறினால் மீண்டும் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைக் கைப்பற்ற வேண்டியிருக்கும் - என்றார்.

# தேசிய மக்கள் சக்தியின் வெற்றி தற்காலிகமானது

## கூறுகிறார் அஜித் பெரேரா

கொழும்பு, நவ. 09

தேசிய மக்கள் சக்தி தற்காலிக வெற்றியையே பெற்றுக் கொண்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்.பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் நூறுக்கு 42 வீத வாக்குகளால் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தியினரை பொதுத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் கூட்டணியினரால் தோல்வியடையச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

சஜித் பிரேமதாஸ நாட்டின் பிரதமராவதற்கு தேவையான அளவு பாராளுமன்ற ஆசனங்களை எம்முடைய கட்சி நிச்சயம் பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. நாளுக்கு நாள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை குறைந்து செய்வதையே ஆய்வுகளின் ஊடாக அறிந்து கொள்ள முடிகிறது. எந்த அரசாங்கத்திற்கும் இத்தகைய நிலை ஏற்பட்டதில்லை. தேசிய மக்கள் சக்தி தற்காலிக வெற்றியையே பெற்றுக்கொண்டுள்ளது. அரச நிர்வாகத்தை கொண்டு நடத்த தேவையான வேலைத்திட்டம் அற்றவர்களாகவே தேசிய மக்கள் சக்தியினர் உள்ளனர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி வாக்குச்சீட்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கல்முனை, நவ. 09

32 ஆயிரம் மாதிரி வாக்குச் சீட்டுகளுடன் இருவரை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரசியல் கட்சி ஒன்றால் அச்சிடப்பட்ட இந்த வாக்குச் சீட்டுகளை வாகனத்தில் எடுத்துச் சென்றபோதே பொலிஸார் கைப்பற்றினர்.

அம்பாறை மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே பொலிஸார் அவற்றை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட மாதிரி வாக்கு சீட்டில் முஸ்லிம் கட்சி மற்றும் விருப்பு இலக்கமொன்றுக்கும் புள்ளடியிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

கைதான இரு சந்தேகநபர்களும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட சட்டவிரோதமான வாக்குச்சீட்டுக்கள் யாவும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மோ. சைக்கிளில் சென்றவர் மின்னல் தாக்கி உயிரிழப்பு!

ஏறாவூர், நவ. 09

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், வந்தாறுமூலையை சேர்ந்த றமீஸ்குமார் (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மற்றொருவருடன் உப்போடை பிரதேசத்தில் உள்ள வயலுக்குச் சென்று விட்டு மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய நபருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் சூரன் போர்!



காரைதீவு, நவ. 09

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரத இறுதி நாளான நேற்று முன்தினம் கொட்டும் மழைக்கும் மத்தியில் நடைபெற்றது.

கந்தசஷ்டி நிறைவில் நடைபெறும் இந்த சூரன்போர் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

சூரன் போரை ஒட்டி சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன.


# மீனவர் பிரச்னைகள் குறித்து கிழக்கு ஆளுநருடன் பேச்சு!

திருகோணமலை, நவ. 09

திருகோணமலை மாவட்ட மீனவர்களின் பிரச்னைகள் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட செயலகம், இலங்கை பொலிஸ், கடற்றொழில் கூட்டுத்தாபனம், கொட்பே மீன்பிடி துறைமுகம், துறைமுக அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவும் பங்கேற்றனர்.

மீன்பிடி தொழிலில் இடைத்தரகர்கள் கட்டாய மாக மீன் வாங்குவது, பறிமுதல் செய்யப்பட்ட மீன்களை ஏலம் விடுவதில் உள்ள சிக்கல்கள் - குளறுபடிகள், மீன்பிடி துறைமுகத்தில் போதைப்பொருள் மிரட்டல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடி உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன.



இதன்போது, தடை செய்யப்பட்ட வலை கருவிகள் மூலம் மீன்களை கொல்வதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கடலோர காவல்படை மற்றும் கடற்படையினருக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். (ஐ)

# திருமலையில் ஊடக கருத்தரங்கு!

திருகோணமலை, நவ. 09

திருகோணமலை மீடியா போரம் ஊடக கருத்தரங்கை நேற்று முன்தினம் இனிய அப்துல் மஜீத் மகா வித்தியாலய மண்டபத்தில் நடத்தியது.

திருகோணமலை மீடியா போரத்தின் தலைவர் எச். எம். ஹலால்தீன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கிண்ணிய பிரதேச செயலாளர் எம். எச். எம்.கனி, கிண்ணியா நகர சபை செயலாளர் முஹம்மது அனீஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி எழுதுதல், அறிகையிடல் தொடர்பில் நடந்த இந்தக் கருத்தமர்வில் 60இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு அழிப்பு


மட்டக்களப்பு, நவ. 09

தாந்தாமலை, மாவடிமுன்மாரி கிராமங்களின் எல்லையில் ஆற்றுப் பகுதியில் இடம்பெற்று வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிட்டு அழிக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

கிராம மக்கள் வழங்கிய தகவலை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த முற்றுகையின்போது சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் 6 பரல்கள் கோடா கைப்பற்றப்பட்டு, அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# வழக்கு அறையிலிருந்த தோட்டாக்கள் மாயம்!

அக்கரைப்பற்று, நவ. 09

அம்பாறை நீதிவான் நீதிமன்றின் வழக்கு அறையில் இருந்த துப்பாக்கி தோட்டாக்கள் காணாமல் போயுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள அம்பாறை பொலிஸார், இது தொடர்பில் நீதிமன்றில் முறைப்பாடு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

1998ஆம் ஆண்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட தோட்டாக்களே, இவ்வாறு காணாமல் போயுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# திருகோணமலை ஊடகவியலாளர்களுக்கு தேர்தல் திணைக்களத்தால் செயலமர்வு

திருகோணமலை, நவ. 09

பாராளுமன்ற தேர்தலையொட்டி திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு, ஒருநாள் செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வை தேர்தல் ஆணைக்குழுவும் அரசாங்கத் தகவல் துணைக் களமும் ஏற்பாடு செய்திருந்தது.

தேர்தல் சட்டங்கள், ஊடகத் தரங்கள், மற்றும் தேர்தல் ஒழுங்கு முறைகள் குறித்து உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு கற்பிப்பதே இந்த செயலமர்வின் முதன்மையான நோக்கமாகும்.

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களில், ஊடகங்களின் பங்கு, தேர்தல் அறிக்கைகளில் ஏற்படக்கூடிய சவால்களை இனங்கண்டு, அவற்றை கையாள்வதற்கான தீர்வுகளை முன்வைத்தல் மற்றும் தேர்தல் காலத்தில் ஊடகவியலாளர்களின் பொறுப்புகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுதல் போன்ற விடயங்கள் குறித்து இந்த செயலமர்வில் கவனம் செலுத்தப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதலில் லெபனானில் 57 பேர் பலி!



பெய்ரூட், நவ. 09

**கிழக்கு லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதல்களில் 57 பேர் உயிரிழந்தனர்.**

காசாமீதான தாக்குதலுக்கு பதிலடியாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் படைகளை தாக்கி வருகிறது.

இந்த நிலையில், இஸ்ரேல் ராணுவம் லெபனானில் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

கிழக்கு லெபனானின் ஹெர்மல் என்ற மாகாணத்தின் கிராமங்கள் மற்றும் நகரங்கள் மீது இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 57 பேர் உயிரிழந்தனர். மேலும் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலில், வரலாற்று சிறப்புமிக்க "அல்-மான்ஷியா" கட்டடம் முழுமையாக அழிவடைந்ததாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# சமூகவலைதளங்களை பயன்படுத்த சிறாருக்கு தடை!

## ஆஸியில் புதிய சட்டம் வருகிறது

சிட்னி, நவ. 09

16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதை தடை செய்யும் சட்டத்தை அறிமுகம் செய்ய உள்ளதாக அவுஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

இதனை அந்நாட்டின் பிரதமர் அன்ரனி அல்பானீஸ் உறுதி செய்துள்ளார். அடுத்த வாரம் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் இது தொடர்பான சட்ட பிரேரணை தாக்கல் செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தீங்கிழைக்கும் சமூக வலைதளங்களில் இருந்து நம் குழந்தைகளை பாதுகாப்பது இதன் நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார். இந்த சட்டப் பிரேரணை பெரிய அளவில் விவாதங்களை எழுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இளம் வயதினரை சமூக வலைதள பயன்பாடு மனரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக பலரும் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் டிக்டோக், இன்ஸ்டாகிராம் மற்றும் ஃபேஸ்புக் போன்ற தளங்களை இளம் வயதினர் பயன்படுத்துவதை இது சற்றே தாமதப்படுத்துகிறது என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். தடைக்கு மாறாக ஒன்லைன் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை அவர்களிடத்தில் ஏற்படுத்தலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# மெக்சிக்கோ நகரில் 11 உடல்கள் மீட்பு!

மெக்சிக்கோ சிற்றி, நவ. 09

மெக்சிக்கோ நகரில் லொறி ஒன்றில் 2 சிறுவர்கள் உட்பட 11 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தல் கும்பலே இவர்களை கொன்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

நெடுஞ்சாலையில் நின்றிருந்த லொறியிலேயே இந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. மெக்சிக்கோ சிற்றியின் அயல் நகரான சில்பான்சிங்கோ நகரில் பதவியேற்ற ஒரு வாரத்திற்குள் மேயர் தலை வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் நடந்து ஒரு மாதத்துக்குள் இந்த படுகொலை சம்பவம் நடந்துள்ளது.

போதைப்பொருள் கும்பல்களே இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. அண்மையில் 5 சிறுவர்கள் உட்பட 17 பேர் காணாமல் போயிருந்தனர். மீட்கப்பட்ட உடல்களில் அவர்களின் உடல்களும் உள்ளனவா என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

மெக்சிக்கோவில் போதைப்பொருள் கும்பல்களால் 2006ஆம் ஆண்டின் பின்னர் 4.5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளை மாளிகையின் முதல் பெண் தலைமை அதிகாரியாகின்றார் சூசி!

வாஷிங்டன், நவ. 09

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் வரும் ஜனவரியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளார். இந்நிலையில், வெள்ளை மாளிகையின் முதல் பெண் தலைமை அதிகாரியாக சூசி வைல்ஸை அவர் நியமித்துள்ளார். இது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

அண்மையில், நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்ப்பின் தேர்தல் பிரச்சாரம் மற்றும் பரப்புரை சார்ந்த வியூகம் அமைக்கும் பணியை சூசி வைல்ஸ் நிர்வகித்தார். இது அனைத்தையும் தன்னை முன்னிறுத்தாமல் அவர் செய்திருந்தார். புளோரிடாவில் ட்ரம்ப் வெற்றி உரையாற்றிய போது சூசி வைல்ஸை பேச அழைத்தார். அப்போது கூட அவர் தயக்கம் காட்டினார்.

"சூசி புத்திசாலி. புதுமை விரும்பி, உலகளவில் மதிக்கப்படுகிறார். அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றும் பணியில் அவர் அயராது பாடுபடுவார், அதற்கான உழைப்பை கொடுப்பார் என நம்புகிறேன். அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக வெள்ளை மாளிகையின் பெண் தலைமை அதிகாரியாக இருக்க சூசி தகுதியானவர்" என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். தொடர்ந்து தனது ஆட்சி நிர்வாகத்தில் பணியாற்ற உள்ளவர்கள் குறித்த அறிவிப்பை அதிபராக உள்ள ட்ரம்ப் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.




67 வயதான சூசி வைல்ஸ், நியூ ஜெர்சியில் பிறந்தவர். அமெரிக்க அரசியல் ஆலோசகராக கடந்த 1979இல் தனது பணியை தொடங்கினார். 1980இல் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் றொனால்ட் ரீகனுடன் இணைந்து பணியாற்றி உள்ளார். தொடர்ந்து அரசியல் ஆலோசகராக பல்வேறு பணிகளை அவர் கவனித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிகை அலங்காரம் பிடிக்காததால் காதலியை கொன்றார் காதலன்!

பென்சில்வேனியா, நவ. 09


காதலியின் புதிய சிகை அலங்காரம் பிடிக்கவில்லை என்பதால் அவரை கத்தியால் குத்தி படுகொலை செய்த காதலனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தை சேர்ந்தவர் பெஞ்சமின் குவால் (வயது 49) இவரின் காதலி கார்மென் மார்டினெஸ் சில்வா (வயது 50).

கார்மென் தலைமுடியை வெட்டி அலங்கரித்துள்ளனார். இந்த புதிய சிகை அலங்காரம் பெஞ்சமினுக்கு பிடிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால், கார்மென்னை கொல்லப் போவதாக பெஞ்சமின் மிரட்டியுள்ளார்.

இதனால், அச்சமடைந்த அவர் வீட்டிலிருந்து வெளியேறி மகளின் வீட்டில் தஞ்சமடைந்துள்ளார். மறுநாள் அங்கிருந்து





தனது சகோதரரின் வீட்டுக்கு சென்றதுடன், தனது தோழி மூலம் பெஞ்சமினுடனான உறவை முறித்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், கார்மென் தங்கியிருந்த வீட்டுக்கு சென்ற பெஞ்சமின் அங்கு அவர் இல்லாத நிலையில் கார்மெனின் சகோதரரை கத்தியால் குத்தியுள்ளார். இதை மறைவிலிருந்து பார்த்த கார்மென் சகோதரரை காப்பாற்ற ஓடிச் சென்றுள்ளார்.

சகோதரரை காப்பாற்ற வந்த கார்மென் மீதும் கார்மெனின் சகோதரர் மீதும் பல தடவை கத்தியால் குத்தியதில் கார்மென் உயிரிழந்தார். காதலி இறந்த பிறகும் கத்தியுடன் அங்கிருந்த பெஞ்சமினை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

# ட்ரம்பின் வெற்றியால் எலானின் சொத்து உயர்வு

வாஷிங்டன், நவ. 09

ட்ரம்பின் வெற்றியால் எலான் மஸ்கின் சொத்து 7.57 இலட்சம் கோடி ரூபாய் அதிகரித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். ட்ரம்பின் வெற்றிக்காக உலக பெரும் பணக்காரரான எலான் மஸ்க் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வந்தார்.

ட்ரம்ப் முன்னிலை பெற்றதுமே டெஸ்லா நிறுவன பங்குகள் விலை உயரத்தொடங்கின. இதனால் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு ஒரே நாளில் 26.5 பில்லியன் டொலர் - நம் நாட்டு மதிப்பில் 7.57 இலட்சம் கோடி ரூபாய் உயர்ந்துள்ளது.

ட்ரம்பின் வெற்றியால் மஸ்க் மட்டும் ஆதாயம் அடைந்ததில்லை. அமேசன் நிறுவனர் ஜெப் பெசோஸின் சொத்து மதிப்பும் அதிகரித்துள்ளது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# போட்டியின் இடையிலேயே வெளியேறிய அல்ஷாரி!




ரினிடாட், நவ. 09

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சாளர் அல்ஷாரி ஜோசப் இடையிலேயே மைதானத்திலிருந்து வெளியேறினார். இது ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

போட்டி நடந்து கொண்டிருந்தபோது, அந்த அணியின் வேகப்பந்துவீச்சாளர் அல்ஷாரி ஜோசப் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.


4ஆவது ஓவரின் போது இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் ஜோர்டன் கொக்ஸ் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். அப்போது அல்ஷாரி ஜோசப் பந்துவீச வந்த போது, இரண்டு பேர் ஸ்லிபில் இருந்தனர். அல்ஷாரி ஜோசப் முதல் பந்தை வெளியே வீசினார். கொக்ஸ் அதை அடிக்கவில்லை.

அடுத்த பந்தின் போது ஸ்லிப்பில் நின்ற வீரரை பொய்ன்ற் திசையில் நிற்க வைத்துள்ளார் அணித்தலைவர் ஹோப். இதனால், அணித் தலைவருக்கும் அல்ஷாரி ஜோசப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. மேலும் அந்த ஓவரை ஓட்டமற்ற ஓவராக வீசினார். களத்தடுப்பு அமைப்பது குறித்து அணித்தலைவர் ஷாய் ஹோப்புடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட அல்ஷாரி ஜோசப், அணித் தலைவர் எதுவும் தெரிவிக்காததால் பாதியிலேயே மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

பயிற்றுநர் டேரன் ஷமி பௌண்ட்ரி எல்லையில் இருந்து குரல் கொடுத்த போதும், அல்ஷாரி ஜோசப் கண்டுகொள்ளாமல் வெளியே சென்றார்.

அல்ஷாரி ஜோசப் மைதானத்தை விட்டு வெளியேறியதால் மேற்கிந்திய தீவுகள் அணியினர் மாற்றுவீரர் யாரும் களமிறங்க முடியாத சூழலால் அடுத்த ஓவரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் 10 வீரர்களுடன் விளையாடவேண்டிய கட்டாயத்தில் விளையாடினர். இதனால், பார்வையாளர்கள், நடுவர்கள் மத்தியில் குழப்பத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. (ஐ)

# சம்பியன்ஷிப் ரென்னிஸ் ஸ்வியாரெக் இலகு வெற்றி!



ரியாத், நவ. 09

சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனை இகா ஸ்வியாரெக் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனைகள் விளையாடும் டபிள்யூ. ரி. ஏ. இறுதி சுற்று எனப்படும் சம்பியன்ஷிப் போட்டி சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடக்கிறது.

இதில், ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த ஆட்டத்தில் முன்னணி வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக், ரஷ்யாவின் டேரியா கசட்கினா உடன் மோதினார்.

இதில் ஸ்வியாரெக் 6-1, 6-0 என எளிதில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# பெங்களூரு அணிக்கு அந்த நால்வரும் தேவை!




கேப்டவுன், நவ. 09

சாஹல், அஸ்வின், ககிசோ ரபாடா, புவனேஸ்வர் குமார் ஆகிய நான்கு வீரர்களும் பெங்களூரு அணிக்கு அவசியம் தேவையானவர்கள் என்று அந்த அணியின் முன்னாள் வீரர் ஏபி. டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

ஐ. பி. எல். 18ஆவது தொடருக்கான ஏலம் சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடக்கவுள்ளது.

இந்த நிலையில், தென்னாபிரிக்கா, பெங்களூரு அணிகளின் முன்னாள் வீரரான ஏ. பி. டி வில்லியர்ஸ் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

அதில், "றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை பொறுத்தவரை அவர்களின் தாய் மைதானத்தில் (எம். சின்னசாமி மைதானம்) புரிந்து கொண்டு விளையாடும் அணியை உருவாக்க வேண்டும். ஐ. பி. எல். மெகா ஏலத்தில் சாஹல், அஸ்வின், ககிசோ ரபாடா மற்றும் புவனேஸ்வர் குமார் ஆகிய 4 வீரர்களுக்கு அதிக தொகையை ஆர். சி. பி. செலவிடலாம். நல்ல விசயம் என்னவென்றால், நம்மிடம் விராட் இருக்கிறார். வீரர்களை தக்கவைப்பதில் நாம் அதிக தொகையை செலவிடவில்லை. இன்னும் செலவிட அதிக தொகை இருப்பது நல்ல விசயம்." என்றார். (ஐ)

# ரிஷப் பந்தை விரைவாக வீழ்த்த எம்மிடம் திட்டம்!

## பட் கம்மின்ஸ் தெரிவிப்பு

மெல்பர்ன், நவ. 09

போர்டர் - கவாஸ்கர் தொடரில் ரிஷப் பந்தின் விக்கெட்டை விரைவாக வீழ்த்த எம்மிடம் நல்ல திட்டங்கள் உள்ளன என்று பட் கம்மின்ஸ் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்தது.

இதையடுத்து இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 22ஆம் திகதி தொடங்குகிறது.


இந்த நிலையில், ரிஷப் பந்த் குறித்து பேசிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் கூறியவை வருமாறு,

ரிஷப் பந்த் போட்டியில் வேகமான மாற்றத்தை ஏற்படுத்துபவர். அவுஸ்திரேலியாவில் அவர் இறுதியாக விளையாடியபோது அது அவருக்கு நல்ல தொடராக அமைந்தது. அவர் களத்தில் இருப்பது எங்கள் அணிக்கு ஆபத்தானது என்று எங்களுக்கு தெரியும். எனவே போர்டர் - கவாஸ்கர் தொடரில் அவரின் விக்கெட்டை விரைவில் வீழ்த்த நாங்கள் முயற்சி செய்வோம். எங்களிடம் சில நல்ல திட்டங்கள் உள்ளன - என்றார்.




# கோலி எவ்வளவு காலம் விளையாடுவார்?

## ஜோதிடரின் கணிப்பு இது



மும்பை, நவ. 09

விராட் கோலி 2027ஆம் ஆண்டு வரை விளையாடுவார். வரும் நாட்களில் கோலி சிறப்பான உச்ச ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று ஜோதிடர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி உலகின் தலைசிறந்த வீரராக தற்போதைய ரசிகர்களால் கொண்டாடப்படுகிறார்.

2008ஆம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமான அவர், கிரிக்கெட்டின் 3 வகை போட்டிகளிலும் அபார ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தார். 80 சதங்களையும் 27 ஆயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களையும் குவித்துள்ள அவர், தற்சமயம் துடுப்பாட்டத்தில் தடுமாறி வருகிறார்.

இந்நிலையில் ஜோதிடர் ஒருவரிடம் தனியார் ஊடகம் ஒன்று விராட் கோலியின் எதிர்காலம் குறித்து சில கேள்விகளை எழுப்பியது.

அந்தக் கேள்விகளுக்கு ஜோதிடர் அளித்த பதிலில்,

அண்மைக்காலமாகவே என்னிடம் விராட் கோலி எவ்வளவு காலம் விளையாடுவார்? என்று கேள்வி முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த கேள்விக்கு நான் கூறும் பதில் ஒன்றுதான், மக்கள் விராட் கோலி விளையாடுவதை பார்ப்பதற்கு ஆவலாகக் காத்திருக்கின்றனர். என்னை பொறுத்தவரை விராட் கோலி 2027ஆம் ஆண்டு வரை நிச்சயம் விளையாடுவார். அதிலும் குறிப்பாக எதிர்வரும் போர்டர் - கவாஸ்கர் தொடரில் அவரின் ஆட்டம் மிகச்சிறப்பாக இருக்கும். இனிவரும் சில ஆண்டுகள்தான் விராட் கோலி தனது உச்சகட்டமான ஆட்டத்தை வெளிப்படுத்துவார். அதனால் நீங்கள் அனைவரும் எதிர்பார்த்தபடியே உங்களின் நட்சத்திர வீரர் அசத்துவார்" - என்றார். (ஐ)

# சம்பியன்ஷிப் ரென்னிஸ் சபலென்கா வெளியேற்றம்!



ரியாத், நவ. 09

சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரிலிருந்து சபலென்கா தோல்வியடைந்து வெளியேறினார்.

உலகின் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனைகள் விளையாடும் டபிள்யூ. ரி. ஏ. இறுதி சுற்று எனப்படும் சம்பியன்ஷிப் போட்டி சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடக்கிறது.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலென்கா, கஜகஸ்தான் வீராங்கனையான எலினா ரிபாகினாவுடன் மோதினார்.

பரபரப்பான இந்தப் போட்டியில் தொடக்கம் முதல் சிறப்பாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய எலினா ரிபாகினா 6-4, 3-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் சபலென்கா தொடரிலிருந்து வெளியேறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

தொடர்பில் தேசிய தேர்தல்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 475 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 558 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 20 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சமூக...

பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்கள் வீட்டில் செய்யவேண்டிய பயிற்சிகள் மற்றும் பணிகள் குறித்து பாடசாலைகளிலேயே விளக்கமளிக்க வேண்டும். இவற்றுக்கு சமூகத் தொடர்பாடல் கருவிகளை பயன்படுத்தக்கூடாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## அரசாங்கத்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அநுர குமார திஸநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தீர்கள். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நாட்டு மக்களுக்காக உழைத்து வருகிறார். இதேபோன்று, நீங்கள் விரும்பிய வளமான நாட்டை உருவாக்குவதற்கு சிறந்த குழுவை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்ய வேண்டும்.

நாட்டில் கடந்த அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் பிரகாரமே செயல்பட்டு வருகிறோம். அதனைக் கொண்டு பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு புதிய வரவு - செலவுத் திட்டத்தை பாராளு மன்றம் ஊடாகக் கொண்டுவர வேண்டும். அந்த மாற்றத்துக்கு ஏற்புடையவர்கள் பாராளு மன்றத்தில அங்கம் வகிக்க வேண்டும்.

எங்களின் அரசாங்கத்துக்கு சர்வதேச ஆதரவு வலுப்பெற்றுள்ளது.

பாடசாலைக் காலம் ஆரம்பிக்கும் போதே மாணவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## எதிர்ப்பு...

தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றின் கருத்தாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளர், "உங்களுடைய அரசியல் எதிர்ப்பு அரசியலா? இணக்க அரசியலா?", என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தென்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றம்தான் என்னை அரசியலில் ஈடுபடுவதற்கு இழுத்திருக்கிறது. இதேபோல, வன்னியில் மக்கள்பட்ட வலிகளையும் மண்பட்ட வடுக்களையும் நீக்க வேண்டுமாக இருந்தால் சில சந்தர்ப்பங்களில் தென்பகுதி அரசியலின் கொள்கைகள், சித்தாந்தங்களை ஏற்று அவர்களுடன் இணைந்து செல்வது நிச்சயம் தேவைப்படும்" - என்றார்.

"எதிர்காலத்தில் தமிழ் அரசுக் கட்சி அமைச்சுகளை பெற்று அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுமா?", என்று மற்றொரு தொகுப்பாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ரவீந்திரகுமாரன்,

"மக்கள் அவ்வாறான கோரிக்கையை முன்வைத்தால் அதனை ஏற்றுக்கொண்டு அமைச்சுகளை பொறுப்பேற்கும் முடிவுகளை எடுக்கத் தயங்கமாட்டோம். இதுவரை காலமும் எதிர்ப்பு அரசியல் செய்ததால் எமது மக்கள் சந்தித்த வலிகள் - வடுக்கள் நிறையவே உள்ளன. ஆகவே, வலிகள், வடுக்களை குறைக்க வேண்டுமானால் சமரச அரசியலுக்கு முன்வரவேண்டும்", என்றார். (ஐ)

## பிரசார...

ஆரம்பமாகவுள்ளது. இதனால், குறித்த நேரத்தில் எந்த பிரசாரமும் செய்யக்கூடாது.

மேலும், வேட்பாளர்களின் குடும்பத்தினர் வாக்கு கேட்க முடியாது. வீடு வீடாக செல்ல முடியாது என அனைத்து வேட்பாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அது சட்டவிரோத செயலாகும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

## சகல...

முன்னாயத்தப் பணிகளுக்காக முதல் நாளான 13ஆம் திகதி புதன்கிழமையும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 18ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு, மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 12 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன், அந்தந்த கிராம அலுவலர்களிடம் பாட சாலைகளை ஒப்படைப்பது என்றும் இதன் போது முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## அரசியலிலிருந்து...

கிளிநொச்சியில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியின்பால் அலையை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் அது பலருக்கு குடைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் அரசுக் கட்சிக்குள் உள்ளவர்களுக்கும் இந்தநிலை ஆதங்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கான போட்டியில் ஜனநாயக ரீதியில் வெற்றி பெற்றிருந்தேன். தலைவராகத் தெரிவான என்னை எமது கட்சிக்குள் வழக்குப் போட்டு செயல்படாது தடுத்தனர். மக்கள் இது தொடர்பாக செய்தி சொல்ல முற்படுகின்றனர். நாங்கள் போகின்ற இடங்களிலும் சொல்கின்றனர்.


எமது கட்சிக்குள் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இங்குள்ள (கிளிநொச்சி) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருடன் சேர்ந்து எனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார். இது தொடர் பாக மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய நிலையுள்ளது.

நான் யாருக்காவது மதுபானசாலை அனுமதி பத்திரத்துக்கு சிபாரிசு செய்திருந்தால் - அதனை உறுதிப்படுத்தினால் அரசியலிலிருந்து என்னை விலக்கி விடுங்கள் என்று மக்களுக்கு சொல்லி வருகிறேன். கிளிநொச்சியிலிருந்த மதுபானசாலைகள் பற்றிய விவரங்களை ஒருவர் திரட்டியுள்ளார். அதனை ஒருவர் என்னுடைய கடிதத் தலைப்பை பயன்படுத்தி போலியாக நான் அனுமதி கோரினேன் என்று கூறிக் காட்டியிருக்கிறார்.

அதிலே சித்தார்த்தனுடைய பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய கடிதத் தலைப்பில் நான் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்ததில் சித்தார்த்தனுடைய பெயர் எப்படி வரும்? இதன் மூலம் மக்கள் விளங்கிக் கொள்வார்கள். பொலிஸ் நிலையத்தில் உரியவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

மக்களிடம் ஒன்றை சொல்கிறேன். என்னை நம்புங்கள் மதுபானசாலைக்கான அனுமதி கொடுத்தமையை உறுதிப்படுத்தினால், பாராளுமன்ற உறுப்பினரான பின்னரும்கூட அரசியலிலிருந்து நான் விலகுவேன் - என்றார். (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கிய அக்குரணை நகரம்!



கண்டி, நவ. 09

கண்டி மாவட்டத்தில் நேற்று பிற்பகல் முதல் பெய்த கனமழையால் அக்குரணை நகரம் வெள்ளத்தில் மூழ்கியது.

இதனால், அக்குரணை நகரத்துடனான போக்குவரத்துகள் முழுமையாக பாதிக்கப்பட்டன.

அத்துடன், அக்குரணை நகரத்தில் உள்ள கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. (ஐ)

# மிகவும் விரும்பத்தக்க தீவாக இலங்கைக்கு விருது!

லண்டன், நவ. 09

லண்டனில் நடைபெற்ற வொன்டர் லஸ்ட் ரீடர் ட்ரவல் (Wanderlust Reader Travel Awards - 2024) விருது விழாவில் உலக சுற்றுலா பயணிகளிடையே மிகவும் விரும்பத்தக்க தீவு நாடாக இலங்கை தெரிவாகியுள்ளது.

இந்த விருதுகளில் இலங்கையானது மிகவும் விரும்பத்தக்க தீவுக்கான தங்க விருதை வென்றுள்ளது. கடந்த வருடம் இந்தப் போட்டியில் எட்டாவது இடத்திலிருந்த இலங்கை இந்த ஆண்டு முதலிடத்தை பெற்றுள்ளது.

இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகளால் வாக்களிக்கப்பட்டு இந்த விருது இலங்கைக்கு கிடைத்துள்ளது. மேலும், அவுஸ்திரேலியா மிகவும் விரும்பத்தக்க நாடாக தெரிவானதுடன், ரோக்கியோ மிகவும் விரும்பத்தக்க நகரம் என்ற விருதையும் பெற்றுள்ளன. (ஐ)

# தேர்தல் சட்டங்கள் மீறல் 11 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, நவ. 09

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 11 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 364 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் பொதுத் தேர்தல் வேட்பாளர்கள் ஆவர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் பொலிஸ் நிலையங்களுக்கு இதுவரை 340 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 54 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 286 முறைப்பாடுகளும் காணப்படுகின்றன.

சந்தேக நபர்களிடமிருந்து 94 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், 50 இலட்சத்துக்கும் அதிகமான சட்டவிரோத சுவரொட்டிகள் , 458 பதாகைகள், 1,322 கட்அவுட்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## ரூ.1000கோடி...

ரணசிங்க என்பவரும் அவரின் மனைவியுமே இவ்வாறு கைதாகினர்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றிலிருந்து தப்பிச் சென்ற இவர், நேற்று அதிகாலை மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டார்.

கொழும்பு வந்த கணவரை அழைத்துச் செல்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்த அவரின் மனைவியும் கைது செய்யப்பட்டார்.

கைதான முதன்மை சந்தேகநபர் குருநாகலில் வணிக பாடசாலை ஒன்றையும் நடத்தி வந்தார். 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோரிடம் 11 வங்கிக் கணக்குகள் மூலமாக அவர் பணத்தைப் பெற்றுள்ளார். இதைத் தொடர்ந்து அவர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார். இவ்வாறு ஏமாற்றிய பணம் ஆயிரம் கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது.

## ஜனாதிபதி...

கூட்டங்களில் பங்கேற்கவே இருவரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணம் வரும் இருவரும் பாஷையூரில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்திலும் பங்கேற்று உரையாற்றவுள்ளனர்.

இதேநேரம், பல்வேறு இடங்களில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# ஊடகங்களை ஒடுக்கும் தேவை எமக்கு இல்லை!

## கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 09

**ஊடகங்களை ஒடுக்கி, தணிக்கைக்கு உட்படுத்துவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்கு கிடையாது என்று அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது பிரதமர் ஊடகங்களை அச்சுறுத்தவில்லை. அவர் பிரதமர் என்பதால் பாதுகாப்பு அதிகாரிகள், அவருக்குரிய பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். அது அவர்களின் பொறுப்பு. எனவே, சிறிய சம்பவத்தை பெருப்பித்து, ஊடக அடக்குமுறையென காண்பிக்க வேண்டாம்.

ஊடக அடக்குமுறையை கையாளவேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் அரசாங்கத்துக்கு கிடையாது. இணைய ஊடகங்களையும் நாம் கட்டுப்படுத்தவில்லை. ஊடக ஒழுக்க விழுமியங்களை கடைபிடித்து செயற்பட வேண்டிய பொறுப்பு ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது.

போலி பிரசாரங்களை முன்னெடுப்பது தவறு. அந்தவகையிலேயே ஜனாதிபதியின் படத்தை பயன்படுத்தி போலி நாணயத்தாளை வெளியிட்ட நபர் கைது செய்யப்பட்டார் - என்றார். (அ)

# பேக்கரி உற்பத்திகளின் விலை குறைய வாய்ப்பு

கொழும்பு, நவ. 09

ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமைக்கு இணையாக பேக்கரி மற்றும் சிற்றுண்டி உற்பத்திகளின் விலைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு உற்பத்திகளின் விலை குறைப்பு வீதம் தொடர்பில் பொதுமக்களால் நுகர்வோர் விவகார அதிகார சபையில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள தாக அமைச்சு தெரிவித்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையின் பலன் மற்றும் மூலப் பொருட்களின் விலை குறைப்பின் பலன் என்பனவற்றை பொது மக்களுக்கு வழங்குவதற்கு பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்களா என்பதை ஆராய்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு இணையாக பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தினரையும் ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்தினரையும் அழைத்து விலை குறைப்பு தொடர்பில் கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# வாக்காளர் அட்டை கிடைக்காதோர் அஞ்சல் அலுவலகத்தில் பெறலாம்!

கொழும்பு, நவ. 09

பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் உரிய அஞ்சல் அலுவலகத்துக்கு சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாயர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். மேலும் தெரிவிக்கையில் -

பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்தது. அதேபோன்று வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கையும் கூட நிறைவடைந்துள்ளது.

வாக்காளர்களுக்கு வாக்காளர் அட்டை இதுவரை கிடைக்கப்பெறவில்லையாயின் அஞ்சல் அலுவலகத்துக்கு சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அதனை பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று வாக்காளர் அட்டை இல்லாத சந்தர்ப்பத்திலும்கூட தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

வாக்களிக்களிப்பதற்கு தேசிய அடையள அட்டை கட்டாயமானதாகும். செல்லும்படியாகும் பழைய புதிய அடையாள அட்டைகள், செல்லும்படியாகும் கடவுச்சீட்டு, செல்லும்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி வாக்களிக்கமுடியும் - என்றார். (அ)




# கந்தபளையில் லொறி விபத்தில் ஒருவர் மரணம்; 6 பேர் காயம்!

கொழும்பு, நவ. 09

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தபளை கொங்கொடியா பகுதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், 6 பேர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து நேற்று காலை இடம்பெற் றுள்ளது.

கந்தப்பளை பிரதான நகரில் இருந்து கொங்கோடியா பகுதிக்கு மர்க்கறி ஏற்றச்சென்ற லொறியொன்று பாதையை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் 43 வயதான ஒருவரே உயிரிழந்தார் எனவும் காயமடைந்த 6 பேரும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.




# இந்திய மீனவர்கள் 12 பேர் விடுதலை!

யாழ்ப்பாணம், நவ. 09

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் நேற்று பருத்தித்துறை நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கால சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் தமிழ்நாட்டின் நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர் கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் படகொன்றும் கைப்பற்றப்பட்டது. (அ-02)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org